# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**MCOP No.**78/2015 **Date**: 24.11.2023.

PW1- பாலாஜி

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை:

விபத்தின்போது நான் TN 28 B 8335 என்ற இருசக்கர வாகனத்தை சங்ககிரி பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையத்தை நோக்கி ஓட்டிக்கொண்டு சென்றேன் என்றால் சரிதான். அப்போது என் வாகனத்தின் பின்னால் சரவணன் அமர்ந்து பயணம் செய்தார் என்றால் சரிதான். விபத்தின் போது எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து பற்றி என் பின்னால் அமர்ந்து வந்த சரவணன் தான் போலிஸ் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் என்னை குற்றவாளியாக காண்பித்து குற்ற எண்.508/2014 என்ற எண்ணில் சங்ககிரி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த முதல் தகவல் அறிக்கையின் நகல் எனக்கு இலவசமாக நீதித்துறை நடுவர் எண்.1 சங்ககிரி அவர்களால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் ஆஜராகி வழக்கறிஞர் மூலம் எதிர்வாதம் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கான STC எண்.8244/2014 ல் 30.12.2014 ல் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் சந்தேகத்தின் பலனை எனக்கு வழங்கித்தான் விடுதலை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பில் நான் குற்றம் செய்யவில்லை என்று தீர்ப்பு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்து லாரியின் எந்த பகுதியில் என் இருசக்கர வாகனம் மோதியது என்றால் லாரியின் இடது பக்க பின்புறமாக மோதியது. அந்த லாரியின் சேதாரத்தை காண்பிக்க நான் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகலை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் மூலம் எனக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனக்கு முன்னால் சென்ற லாரியீன் பின்பக்கம் வலது புறமாகத்தான் மோதினேன் என்றால் சரியல்ல. நான் அந்த லாரியின் வலது பக்க பின்புறத்தில் மோதியதை மறைப்பதற்காகத்தான் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக சொல்லப்பட்டவை என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவு காரணம் என்பதால் தான் என்னுடன் வந்த சரவணன் எனப்வர் என் மீது போலீஸ் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கவனக்குறைவு காரணம் என்பதால் 1, 2ம் எதிர்ம்னுதாரர்கள் எனக்கு இழப்பீடுசெலுத்த தேவையில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு தலை மற்றும் வலது கை, வயிறு ஆகிய இடங்களில் காயமானது.

நான் தலைக்கவசம் அணியவில்லை என்பதால் தான் தலையில் காயமானது என்றால் சரியல்ல. விபத்திற்கு பின் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அதன் பின்பு சங்ககிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் குணமாகி நல்ல நிலையில் உள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு விபத்து காயங்கள் குணமாகவில்லை என்று மனுவிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எந்த வருமான இழப்பும், உடல் ஊனமும், நிரந்த ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் வயது, வேலை, வருமானம் ஆகியவற்றை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/- பாலாஜி

ஒம்/- ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.